6. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(எ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

திரு. சி. சண்முகவேலு: *இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையில் எதிர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அறிமுக நிலையில் நீங்கள் எதிர்க்கிறீர்கள், உட்காருங்கள். உங்கள் எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS